இரண்டாம் நாள்

# 2. நோவா

## பாகம் - 1 பாடப் போதனா முறை

### இறைவார்த்தை

தொடக்க நூல் 6:8-22; 7:7-24; 9:11-13 (ஏதேனும் ஒன்று)

*(இந்த இறைவார்த்தைப் பகுதிகளை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

### இறைச்செய்தி

- ✷ நோவாவுக்குக் கடவுளின் அருள்பார்வை கிடைத்தது.
- ✷ கடவுள் நேர்மையாளர்களைக் காப்பாற்றுவார்.
- ✷ தீய வழியில் நடப்போரைக் கடவுள் அழிப்பார்.

### மனநிலை

- ❖ நான் கடவுளின் விருப்பப்படி நடப்பேன்.
- ❖ அவரது கட்டளைகளைக் கடைப்பிடிப்பேன்.
- ❖ அப்போது கடவுள் என்னைப் பாதுகாப்பார்.

**1. தொடக்கச் செபம்**

**பாடல் :** *கட்டாந்தரையில் கப்பல் கட்டுவேன்*
*நான் கடவுளின் வார்த்தையை நம்பி...*

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

மகிழன் என்னும் இளைஞன் கடற்கரைக் கிராமத்தில் வாழ்ந்து வந்தான். அவன் யாருடைய சொல்லையும் கேட்க மாட்டான். அன்புப் பெற்றோரையும் அவன் மதிக்க மாட்டான். ஒருநாள் மழை பெய்து கொண்டே இருந்தது. வானொலியில் புயல் எச்சரிக்கை பற்றிக் கூறிக்கொண்டே இருந்தனர். கடலுக்குள் எவரும் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என அறிவிப்புக் கொடுத்தனர். மகிழனோ யாருடைய சொல்லையும் கேட்காமல் தன் மனம்போனபடி படகை எடுத்துக் கொண்டு மீன் பிடிக்கக் கிளம்பினான். அவனது தாய் கூறியும் அவன் கேட்கவில்லை. இறுதியில் புயலில் சிக்கி இறந்து போனான்.

**3. அடையாளத்தை அலசுதல்**

- ★ மகிழன் எங்கு வாழ்ந்து வந்தான்?
- ★ மகிழன் எப்படிப்பட்ட பண்பு உடையவன்?
- ★ மகிழனின் செயல்கள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**4. வாழ்க்கை மதிப்பீடு**

பல்வேறு காலங்களிலும், எதிர்பாராத வேளைகளிலும் ஆபத்துகளிலிருந்து கடவுள் நம்மைக் காப்பாற்றுகிறார். கடவுள் நம்மை ஒருபோதும் கைவிடுவதில்லை.



**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

மண்ணுலகில் ஒவ்வொருவரும் தீய வழியில் நடக்கும்போது கடவுள் அவர்களை எச்சரிக்கிறார். நேர்மையாளராகவும், குற்றமற்றவராகவும் வாழும் மனிதருக்குக் கடவுள் செய்யும் நன்மையை இப்பொழுது வாசிக்கக் கேட்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

அலங்கரிக்கப்பட்ட மேசையில் விவிலியத்தை அரியணையேற்றுக. மாணவர்கள் மூன்று குழுக்களாகப் பிரிந்து விவிலியத்தைச் சுற்றி வட்டமாக நிற்கவும். முதல் குழுவினர் கைகளில் தீபமும், 2 வது குழுவினர் கைகளில் தூபமும், 3 வது குழுவினர் கைகளில் மலர்களும் வைத்து அஞ்சலி செய்வர். அஞ்சலி செய்யும்போது பின்வருமாறு பாடுக.

| | | |
|---|---|---|
| **ஒளி** | : | *ஒளிமயமான இறைவார்த்தையே போற்றி!* |
| **தூபம்** | : | *நறுமணம் தரும் இறைவார்த்தையே போற்றி!* |
| **மலர்கள்** | : | *மகிழ்வூட்டும் மலர்களாம் இறைவார்த்தையே போற்றி!* |

**7. இறைவார்த்தை முழக்கம்**

தொடக்க நூல் 6:8-22; 7:7-24; 9:11-13

**8. இறைவார்த்தை விளக்கம்**

- ♦ நம் முதல் பெற்றோர் ஆதாம், ஏவா மூலம் மனித குலம் பெருகியது.
- ♦ பூவுலகம் வன்முறையால் நிறைந்து, சீர்கெட்டிருந்தது.
- ♦ மனிதர்கள் தீயவராய் வாழ்ந்து வந்தனர்.
- ♦ நோவாவும் அவரது குடும்பத்தினரும் நேர்மையாளராக வாழ்ந்து வந்தனர்.
- ♦ கடவுள் நோவாவைக் காப்பாற்ற விரும்பினார்.
- ♦ மரத்தால் பேழை செய்யும்படி கடவுள் நோவாவிடம் கூறினார்.
- ♦ உயிரினங்களைச் சோடி சோடியாகப் பேழையினுள் அடைத்து, நோவா குடும்பத்தினரும் பேழைக்குள் செல்லக் கடவுள் கட்டளையிட்டார்.
- ♦ 40 நாள்கள் இரவும் பகலும் இடைவிடாது மழை பெய்தது.
- ♦ நிலத்தில் ஊர்வன, பறப்பன, காட்டு விலங்குகள், நிலத்தில் தவழ்வன, மனிதர் அனைவரும் மாண்டனர்.
- ♦ நோவா, குடும்பத்துடன் கடவுளால் காப்பாற்றப்பட்டார்.
- ♦ கடவுள் - நோவா உடன்படிக்கையின் அடையாளம் வானவில்.
- ♦ நோவா கடவுளுக்கு நன்றிப் பலி செலுத்தினார்.

**9. உய்த்துணரச் செய்தல்**

- ✪ நோவாவைக் காப்பாற்றிய கடவுள் இன்று என்னையும் காப்பாற்றுவார்.
- ✪ நான் கடவுளுக்குத் தினமும் நன்றி கூறுவேன்.

## பாகம் - 2 கலை வழிப் பயிற்சி

### 1. வார்த்தை விளையாட்டு

நோவா: தொநூ 6:8-22; 7:7-24; 9:11-13

கட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களை எப்படியும் பயன்படுத்தி குறைந்தது 15 வார்த்தைகளைக் கண்டு பிடியுங்கள்.


தொநூ 6:10 - எப்பேத்து    தொநூ 6:9 - நேர்மையாளர்
தொநூ 8:7 - காகம்    தொநூ 8:8 - புறா
தொநூ 7:17 - வெள்ளப்பெருக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| எ | வெ | த் | ப் | பே |
| கா | நே | து | நே | மை |
| ர் | பு | பெ | ப் | ரு |
| ள் | ப் | ள | ம் | றா |
| கு | யா | க | ள | ர் |


1. எப்பேத்து 2. நேர்மையாளர் 3. காகம்
4. புறா 5. வெள்ளப்பெருக்கு 6. நேர்மை
7. பேதுரு 8. பெருமை 9. கார்
10. எருமை 11. வெள்ளம்
12. வெருப்பு 13. எள் 14. காது
15. காப்பு 16. குளம் 17. நேரு
18. வெறுமை 19. யார் 20. களம்

### 2. குறுக்கெழுத்து: புதிர் விளையாட்டு

கீழே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களை எடுத்துக் கட்டங்களுக்குள் பொருத்துக.



1. எப்பேத்து
2. அறுநூறு
3. அரராத்து
4. முந்நூறு
5. முப்பது
6. முந்நூற்றைம்பது
7. சேம்




**இடமிருந்து வலம்**
1. எப்பேத்து 2. அறுநூறு

**வலமிருந்து இடம்**
5. முப்பது 6. முந்நூற்றைம்பது

**மேலிருந்துகீழ்**
7. சேம்

**கீழிலிருந்து மேல்**
3. அரராத்து 4. முந்நூறு

### 3. காமெடி

**இடம் : டீக்கடை**

(டீ குடிப்பவர்கள் பேசிக் கொண்டிருக்க சில பெண்கள் அந்த வழியே செல்கின்றனர்).



**நவின்:** கல்யாணம் கட்டிக்கிட்டு ஓடிப்போலாமா? இல்ல ஓடிப்போயி கல்யாணம்தான் கட்டிக்கில்லாமா?

(ரூபன் வருதல்)

**ரூபன்:** அடப்பாவி, உன்னத் திருத்த நூறு இயேசு நாதர் வந்தாலும் நீ திருந்தமாட்ட.

**நவின்:** வந்துட்டான்யா, வந்துட்டான்யா, கருத்துச் சொல்றவன் வாடா வாடா?

**ரூபன்:** ஏய் இதோ பாரு நவின் நீ இப்படிப் பெண்களக் கிண்டல் பண்ணினா அவங்க கையிலே ஒதபடுவ

**நவின்:** ஏலெய் நானெல்லாம் கருஞ்சிறுத்தைக்காரன். என்ன ஒண்ணும் செய்ய முடியாது.

**ரூபன்:** டேய்! நேத்துத்தான் அவங்க கையிலே அடிவாங்கின

**நவின்:** டேய்! அது போன மாசம். நான் சொல்லறது இந்த மாசம்.

**ரூபன்:** இப்படி எல்லா மனுசனும் பாவம் செய்ய ஆரம்பிச்சுட்டா. அதான் ஊருக்குள்ள மழையே இல்ல. அப்புறம் கடவுள் தொடக்க நூல் வரலாற்றில் மழையால் உலகத்தையே அழிச்ச மாதரி நம்ம ஊரையும் அழிச்சிடுவாறு.

**நவின்:** வரலாறு புதுசா இருக்கு.

**ரூபன்:** உலகத் தொடக்கக் காலத்தில் பூமியில் பாவம் பெருகிற்று. கடவுளுக்குப் பயங்கரக் கோபம். ஆனா, உண்மையுள்ள நோவாவைக் காப்பற்ற ஒரு பேழை செய்யச் சொல்லி அதில் ஒரு சோடி விலங்கினங்கள், பறவைகள். இப்படி சோடி சோடியாக உள்ளே விட்டுக் காப்பாற்றினார். 40 நாள்கள் விடாமல் பெய்த மழையால் உலகம் அழிச்சிடுச்சி.

**நவின்:** எல்லாரும் அழிஞ்சிட்டாங்களா?

**ரூபன்:** பாவம் செய்த மனிதர் எல்லாரும் செத்துப் போயிட்டாங்க. புண்ணியம் செய்த நோவாவும் அவரது குடும்பம் மட்டுமே காப்பாற்றப்பட்டது.

பாவம் செய்த உன்னைக் கடவுள் எப்போது சாய்ப்பாருண்ணு எனக்குத் தெரியாதப்பா.

**நவின்:** (கன்னத்தில் அடித்துக் கொண்டு) அய்யய்யோ! அப்பு இத நீ நான் ஒன்னாங்கிளாசில் படிச்சப்பவே சொல்லியிருந்தா நான் பாவம் செஞ்சிருக்க மாட்டேனே! இனிமே நான் பாவம் செய்ய மாட்டேன். அப்பு! என்ன மன்னிச்சிடு அப்பு?.. . ம் ம் . . . .

மூன்றாம் நாள்

# 3. ஆபிரகாம் - ஈசாக்கு

## பாகம் - 1 பாடப் போதனா முறை

### இறைவார்த்தை

தொடக்க நூல் 21:1-5; 22:1-18

*(இந்த இறைவார்த்தைப் பகுதிகளை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

### இறைச்செய்தி

* கடவுள் அனைவரையும் ஆசீர்வதிக்கின்றவர். ஆபிரகாமுக்குக் அவர் வாக்குறுதி அளித்தார்.
* ஆபிரகாம் கடவுளுக்காகத் தன் ஒரே மகன் ஈசாக்கைப் பலியிடவும் தயங்கவில்லை.
* கடவுள் ஆபிரகாமுக்கு ஆசி அளித்தார்.

### மனநிலை

❖ ஆபிரகாமுக்கு அளித்தது போல கடவுள் எனக்கும் ஆசியளிக்கின்றார். நானும் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பேன்.

**1. தொடக்கச் செபம்**

அன்பான ஆண்டவரே! நீர் அனைவரையும் ஆசீர்வதிக்கின்றவர். ஆபிரகாமுக்கு வாக்குறுதி தந்து ஆசீர்வதித்ததுபோல எங்களையும் ஆசீர்வதியும். ஆமென்.

***பாடல் :*** *ஆலயத்தில் நாம் நுழைகையிலே புது*
*நினைவுகள் நுழைகின்றன.*

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

நிம்மி முதலாம் வகுப்பு படித்து வருகிறாள். அவள் ஒழுங்காகப் பள்ளி செல்வதில்லை. விளையாடிக் கொண்டே இருப்பாள். ஆகவே அவளது பெற்றோர் மிகவும் கவலை அடைந்தனர். நிம்மி வீட்டுக்கு அவருடைய மாமா வந்தார். நிம்மியின் செயல்களைப் பார்த்து அவளிடம் "நீ ஒழுங்காகப் பள்ளி சென்று நன்றாகப் படித்து முதல் மதிப்பெண் வாங்கினால், நான் உனக்கு ஒரு பரிசு தருவேன்" என்று கூறினார். அன்று முதல் நிம்மி ஒழுங்காகப் பள்ளி சென்று நன்கு படித்து முதல் மதிப்பெண் பெற்றாள். நிம்மியின் மாமா அவளுக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி புதிய ஆடைகளையும் பொம்மை மற்றும் இனிப்பும் வாங்கிக் கொடுத்தார். வீட்டில் அனைவரும் மகிழ்ந்தனர்.

**3. அடையாளத்தை அலசுதல்**

◆ நிம்மியின் மாமா என்ன கூறினார்?
◆ நிம்மிக்குப் பரிசு கிடைத்தது ஏன்?
◆ நீங்கள் வாக்குறுதிப்படி பரிசு பெற்றிருக்கிறீர்களா?



**4. வாழ்க்கை மதிப்பீடு**

பெரியவர்கள் சொல் கேட்டு நடந்தால் பாராட்டும் பரிசும் கிடைக்கும்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

ஆபிரகாமுக்கு முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கடவுள் கொடுத்தார். கடவுளின் விருப்பப்படி அம்மகனைப் பலியிட ஆபிரகாம் தயாராய் இருந்தார். இப்பகுதியை வாசிக்கக் கேட்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

மாணவர்கள் வரிசையாக வந்து விவிலியத்தின் மீது கைகளைப் பக்தியுடன் வைத்து நெற்றியில் ஒற்றிக்கொள்ளல். "இயேசுவே உந்தன் வார்த்தையால்" என்ற பாடலை அப்போது பாடலாம்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

தொடக்க நூல் 21:1-5; 22:1-18

**8. இறைவார்த்தை விளக்கம்**

✸ கடவுள் மீது நம்பிக்கைக் கொண்டு அவர் வாக்களித்த கானான் நாட்டிற்கு ஆபிரகாம் சென்றார்.
✸ அப்போது ஆபிரகாமுக்கு வயது 75.
✸ ஆபிரகாம் மனைவி பெயர் சாரா. இவருக்குக் குழந்தை இல்லை.
✸ கடவுள் கொடுத்த வாக்குறுதியின்படி சாரா ஈசாக்கைப் பெற்றார். அப்போது ஆபிரகாமுக்கு வயது 100.
✸ ஆபிரகாம் தாம் அன்பு கூரும் ஒரே மகன் ஈசாக்கைப் பலியிடும்படி, கடவுள் கேட்டபோது அவர் தயங்கவில்லை. கடவுளுக்குக் கீழ்ப்படிந்தார்.
✸ கடவுள் ஈசாக்கை மீண்டும் ஆபிரகாமுக்கு அன்புக் கொடையாகக் கொடுத்தார்.

**9. உய்த்துணரச் செய்தல்**

✸ கடவுளின் வாக்குறுதியை நம்பி வாழும் நம் அனைவரையும் கடவுள் ஆசீர்வதிப்பார்; உயர்த்துவார்.
✸ நானும் எப்போதும் கடவுளுக்குப் பணிந்து வாழ்வேன்.


## பாகம் - ௨ கலை வழிப் பயிற்சி

### 1. புதிர்

1. சாக்கு மேலே ஓர் ‘ஈ‘ அதன் பெயர் என்ன? **விடை: ஈசாக்கு**
2. பாலை நிலத்துல எது கிழிஞ்சாலும் கவலையில்லை ஏன்?
   **விடை: ஒட்டகம்**
3. ஆபிரகாம் ஓட்டிச்சென்ற கழுதை படுவேகமாக ஓடிப்போய் மலை அருகில் நின்றதாம். அங்கே அது என்ன வாங்கும்?
   **விடை: மூச்சு வாங்கும்**
4. ஈசாக்கு சுமந்த விறகுக் கட்டை ஏன் பெரிசா இருக்கு?
   **விடை: அவர் படுக்க இடமில்லாததால்**
5. முத்தியும் கொடுக்கலாம்: ச்சீன்னும் தள்ளலாம்; மிதித்தும் தள்ளலாம் - ஆனால் கோபப்படாது அது என்ன? **விடை: கல்**
6. பார்த்தா பசு மரம்; பட்டுவிட்டால் சுடு மரம் அது என்ன?
   **விடை: நெருப்பு**
7. காம் ரொம்பக் காம் என்ன காம்? **விடை: ஆபிரகாம்**
8. வாக்கிலே சிறந்தது; நாவிலே ஒலிப்பது; நெஞ்சிலே நிற்பது; நிலையாய் வாழ்வது. அது என்ன? **விடை: அருள்வாக்கு**
9. சாவி (key) என்று முடியும் மிருகத்தின் பெயர் என்ன? **Donkey**
10. தெருக்களில் இருக்கும் பகலில் உறங்குவான், இரவெல்லாம் விழித்திருப்பான். அவன் யார்? **விடை : தெருவிளக்கு**

### 3. குறுக்கெழுத்துப் புதிர்

**கீழே கொடுக்கப்பட்டுள்ள பெயர்களை கட்டங்களில் நிரப்புக.**




**மகன், கழுதை, தோல்பை, ஆபிரகாம், ஈசாக்கு, மலை, விறகு, பையன்**

**1. இடமிருந்து வலம்**


ஈசாக்கு, மகன்

**2. மேலிருந்து கீழ்**

மலை, விறகு, தோல்பை
பையன், ஆபிரகாம்

**3. கீழிருந்து மேல்**

கழுதை






### 4. ஆபிரகாம், ஈசாக் வீட்டிற்கு செல்ல வழி காட்டுவீர்

விடை





நான்காம் நாள்

# 4. யாக்கோபு

## பாகம் - 1 பாடப் போதனா முறை

### இறைவார்த்தை

தொடக்கநூல் 32:21-32

*(இந்த இறைவார்த்தைப் பகுதியை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

### இறைச்செய்தி

- யாக்கோபு தன் சொந்த நாட்டிற்குத் திரும்பி வந்து தன் சகோதரர் ஏசாவிடம் சமாதானம் கூறினார்.
- ஏசாவுக்குப் பயந்து, யாக்கோபு கடவுளிடம் மன்றாடுகிறார்.
- யாக்கோபின் வழித்தோன்றல்களே 'இஸ்ரயேல்' என அழைக்கப்பட்டனர்.

### மனநிலை

- எனது வாழ்வின் பிரச்சினைகளில் நான் கடவுளைத் தேடுவேன். கடவுள் என் செபத்தைக் கேட்பார்.

**1. தொடக்கச் செபம்**

'நான் உங்களோடு இருப்பேன்' என்று யாக்கோபுக்குச் சொன்ன அன்பு இறைவா, எங்களோடு தங்கும். எங்கள் செயல்களையும், இன்றைய விவிலிய வகுப்பையும் ஆசீர்வதியும். ஆமென்.

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

ஒரு வீட்டில் ஜோன், ஜெயா என்ற இரு சகோதரிகள் இருந்தனர். இருவரும் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அப்பா, அம்மா எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. ஆகவே அப்பா அவர்கள் இருவரையும் தனித்தனியாக விடுதியில் சேர்த்து விட்டார். அங்கு நடைபெற்ற தியானத்தில் சகோதர ஒற்றுமை கடவுளை மகிழச் செய்யும் என்று ஜோன் கற்றுக் கொண்டாள். கோடை விடுமுறைக்கு இருவரும் வீட்டிற்கு வந்தனர். தியானத்தில் கேட்டதை ஜோன் ஜெயாவிடம் கூறினாள். ஆண்டவரின் வார்த்தையைக் கேட்டதால் இருவரும் சமாதானமாக இருந்தனர்.

**3. அடையாளத்தை அலசுதல்**

- சகோதரிகள் எவ்வாறு வாழ்ந்தனர்?
- தந்தை செய்தது என்ன?
- ஜோன் எவ்வாறு மனம் மாறினாள்?
- நீங்கள் சமாதானம் செய்து கொண்ட அனுபவங்களைக் கூறுங்கள்.



**4. வாழ்க்கை மதிப்பீடு**

விட்டுக் கொடுத்து, சமாதானத்துடன் வாழ்வதே மிகச் சிறந்த வாழ்வாகும்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

யாக்கோபு கடவுளுடைய தூதருடன் போராடி 'இஸ்ரயேல்' என்று பெயர் பெற்றதை இன்று படிப்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

ஆசிரியர் நடுவில் நின்று கொண்டு திருவிவிலியத்தை உயர்த்திப் பிடித்திருப்பார். பிள்ளைகள் தங்களது கரங்களை இணைத்துப் பிடித்துக் கொண்டு "வார்த்தையே வாரும் வார்த்தையே வாரும்; வாழ்வினை வழங்கும் வார்த்தையே வாரும்" என்று ஆசிரியர் பாடப் பின்தொடர்ந்து பாடுவர். இறுதியில் திருவிவிலியத்தை நோக்கிக் கரங்களை நீட்டித் தம் கண்களில் ஒற்றிக்கொள்வர்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

தொடக்க நூல் 32:21-32

**8. இறைவார்த்தை விளக்கம்**

- கடவுள் கட்டளையிட்டபடியே யாக்கோபு தம் சொந்த நாட்டுக்குத் திரும்பினார்.
- 'மகனயிம்' என்ற இடத்தில் கடவுளின் தூதர், யாக்கோபைச் சந்தித்தார்.
- தூதர் யாக்கோபிடம் உன் சகோதரர் ஏசா 400 பேருடன் உம்மைச் சந்திக்க வருகிறார் என்றார்.
- யாக்கோபு தன் சகோதரர் ஏசாவுக்கு மிகவும் அஞ்சினார். ஆகவே கடவுளிடம் மன்றாடினார்.
- யாக்கோபு தன் சகோதரரைத் திருப்திப்படுத்த வெள்ளாடுகள், செம்மறியாடுகள், ஒட்டகங்கள், பசுக்கள், கழுதைகள் ஆகிய அன்பளிப்புகள் அளித்தார்.
- அன்பளிப்புகள் முன் செல்ல யாக்கோபு தன் மனைவியரோடும், புதல்வர், புதல்வியரோடும் பின்சென்றார்.
- யாக்கோபு அன்றிரவு தனித்திருக்க, ஓர் ஆடவர், பொழுது விடியுமட்டும் அவரோடு மற்போரிட்டார்.
- யாக்கோபின் தொடைச் சந்து இடம் விலகியது.
- பொழுது புலரும் பொழுது, தன்னை ஆசீர்வதித்தால் ஒழிய ஆடவரைப் போகவிடமாட்டேன் என்று யாக்கோபு கூறினார்.

- அப்பொழுது ஆண்டவர் இனி உன் பெயர் 'யாக்கோபு' எனப்படாது, 'இஸ்ரயேல்' எனப்படும் என்றார். ஏனென்றால் 'கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கொண்டாய்' என்றார்.
- அந்த இடத்திற்கு யாக்கோபு 'பெனியேல்' என்று பெயரிட்டார்.

**9. உய்த்துணரச் செய்தல்**

- கடவுளிடம் இறைவேண்டல் செய்யும்பொழுது வெற்றி உண்டாகிறது.

## பாகம் - 2 கலை வழிப் பயிற்சி

**1. கயிறு விளையாட்டு**

1. குழுவில் 20 பேர் இருத்தல்.
2. அவர்களில் 10 பேர் வீதம் இரு குழுக்களாகப் பிரித்தல்.
3. நடத்துனரிடம் ஒரு வடக் கயிறு கொடுத்து 'அ' குழுவினர் கயிற்றைப்பிடிப்பர்.
4. அவ்விதமே 'ஆ' குழுவினர் எதிர்ப்புறமிருந்து அதே கயிற்றைப் 10 பேர் பிடித்திருப்பர்.
5. நடத்துனர் விசில் ஊதுவார்.
6. விசில் ஊதியதும் 'அ' குழுவினர் இழுப்பர்.
7. அவ்விதமே 'ஆ' குழுவினரம் இழுப்பர்.
8. எந்தக் குழுவினர் விழாமல் திடமாய் இழுக்கிறார்களோ அவர்கள் வெற்றி பெறுவர்.
9. இழுத்து விழுந்தவர் தோல்வியடைவர்.
10. பலம்மிக்க குழுவிற்குக் கைதட்டி அல்லது பரிசு வழங்கி பாராட்டலாம்.

**குறிப்பு: பார்ப்பதற்கு மிக அருமை. இழுப்பவர் சக்தி அறிதல்.** வெற்றி பெற்றவர் யாக்கோபு போல் பலம் உடையவர் எனக்கூறி கைதட்டுதல்.

**2. குச்சி விளையாட்டு**

1. நடத்துனர் 10 மாணவர்களை தேர்ந்தெடுப்பார்.
2. முதல் 5 மாணவர்களை நிற்க வைப்பார்.
3. மற்ற 5 மாணவர்களை முன்பு நிற்க வைத்த மாணவர்களுக்கு எதிரில் முகத்திற்கு முகம் காணும்படி நிற்க வைத்தல்.
4. 5 ஜோடியாக ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணம் நிற்பர்.
5. ஒரு ஜோடிக்கும் அடுத்த ஜோடிக்கும் மூன்றடி இடைவெளி தேவை.
6. ஒரு அடி நீளமுள்ள குச்சி இருவருக்கு ஒன்றாக 5 கொடுத்தல்.



7. ஒவ்வொரு ஜோடியும் குச்சியை பிடித்த வண்ணம் நிற்றல்.
8. நடத்துனர் விசில் ஊதுவார்.
9. விசில் ஊதியதும் ஜோடிகள் விடாமல் இழுத்தல்.
10. கீழே குச்சியின்றி சாய்ந்து விழுவோர் தோல்வியுற்றவர்.
11. குச்சியை விடாமல் வைத்திருப்போர் வெற்றிபெற்றவர் ஆவார்.

**3. விடுகதை**

1. இரண்டு மனைவிக்காரன் நான். நாட்டாமையும் அல்ல. ஒரு டஜன் பிள்ளைகளுக்குத் தந்தை நான் கூத்தாடியும் அல்ல. நான் யார்?
   **விடை: யாக்கோபு 32:22**
2. தனியாள் நான் சிட்டிசன் அல்ல. பக்கத்து நாட்டின்மீது போர் தொடுக்கும் பின்லேடனும் அல்ல. ஆண்டவரோடு போரிட்டவன் இந்த அதிசய மனிதர் யார்?
   **விடை: யாக்கோபு 32:25**
3. ஆண்டவர் ஆசிக்காக அடம் பிடித்த கழுதை ஆனேன் நான் யார்?
   **விடை: யாக்கோபு32:26**
4. தெருக்கூத்தும் ஆடவில்லை; நாகரீக சினிமாக் கூத்தும் ஆட வில்லை. இருந்தாலும் உன் பெயர் என்ன என்று கேட்டவர் யார்?
   **விடை: ஆடவர் 32:27**
5. மாற்றிய பெயரால் குலத்திற்கே தலைவனானேன். அந்த அதிசயப் பெயர் என்ன?
   **விடை: இஸ்ரயேல் 32:28**
6. கடவுளின் முகத்தை முதலில் கண்டவன்; கடுகளவும் பாதிக்கப்படாதவன். நான் யார்?
   **விடை: யாக்கோபு 32:30**
7. இஸ்ரயேல் இந்நாள் வரை உண்ணாத உணவு அது எது?
   **விடை: தொடைச் சந்து சதை 32:32**

**4. பாடல்**

யாக்கோபே யாக்கோபே
நீ மட்டும் பிழைப்பது நியாயமா?
யாக்கோபே யாக்கோபே
அண்ணன் ஏசாவை ஏமாற்றலாமா?

அண்ணனை ஏமாற்றி அமைதி இழந்தாய்
மாமன் வீட்டில் ஏமாறி நீ சோமாறியானாய் (யாக்கோபே)

அண்ணனோடு ஒப்புரவாகி அமைதி பெற்றிட்டாய்
உன்னைப் போல இணைந்து வாழ்ந்தால் இன்பம் இன்பமே (யாக்கோபே)

ஐந்தாம் நாள்

# 5. மோசே

## பாகம் - 1 பாடப் போதனா முறை

### இறைவார்த்தை

விடுதலைப் பயணம் 1:22; 2:1-15

*(இந்த இறைவார்த்தைப் பகுதியை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

### இறைச்செய்தி

- கடவுள் நம்மைக் கைவிடமாட்டார்.
- எகிப்தில் துன்புற்ற இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தர கடவுள் மோசேயைத் தேர்ந்தெடுத்தார்.
- கடவுள் மேசேயுடன் இருந்து அவரை வழிநடத்தினார்.

### மனநிலை

- என்ன துன்பம் வந்தாலும் கடவுள் என்னை ஒருபோதும் கைவிடமாட்டார்.
- கடவுளின் திட்டத்தை நிறைவேற்ற என்னைக் கையளிப்பேன்.

**1. தொடக்கச் செபம்**

***பாடல்:*** *அழைக்கும் இறை உன் குரல் கேட்போம்.*

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

பெண் குழந்தை வேண்டாமென நினைத்த ஓர் இந்தியப் பெற்றோர், தங்களுக்குப் பிறந்த பெண் குழந்தையைக் குப்பைத் தொட்டியில் போட்டனர். பலமணி நேரம் உயிருக்குப் போராடிய அக்குழந்தையின் அழுகுரலைக் கேட்டு உதவி செய்ய முன் வந்தனர் ஒரு ஜெர்மானியத் தம்பதியினர். அக்குழந்தையைக் குப்பைத் தொட்டியில் இருந்து எடுத்துக் குளிப்பாட்டித் தங்களோடு எடுத்துச் சென்றனர். அப்பெண்மணி இன்று வளர்ந்து வாழ்வில் உயர்ந்து மனித உரிமைக்காகப் போராடும் அமைப்பை ஏற்படுத்தி உலகின் சிறந்த பெண்மணியாகத் திகழ்கிறார்.

**3. அடையாளத்தை அலசுதல்**

- குழந்தையின் பெற்றோர் செய்தது என்ன?
- ஜெர்மானியத் தம்பதியர் என்ன செய்தனர்?
- இன்று அப்பெண் என்ன செய்கிறார்?
- இது போன்ற நிகழ்வுகளைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

**4. வாழ்க்கை மதிப்பீடு**

பல நேரங்களில் நம்மால் ஒதுக்கப்பட்டவர்களே நமக்கு அதிக உதவிகள் செய்கிறார்கள்.



**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

வேண்டாம் என வீசி எறியப்பட்ட பெண் ஒரு சமூகப் பணியாளர் ஆனார். அதுபோல பார்வோன் அரசரின் ஆணைக்குப் பயந்து ஆற்றில் வீசப்பட்ட ஒரு குழந்தையைப்பற்றிக் கூறும் இறைவார்த்தைக்குச் செவிசாய்ப்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

மாணவர் பிரதிநிதிகள் ஐவர் அரியணை ஏற்றப்பட்டுள்ள திருவிவிலியத்தின் அருகில் வருவர். “உலகின் ஒளியான வார்த்தையே போற்றி!” என்று கூறி சில மலர்களை விவிலியத்தின் மீது ஒருவர் தூவிப் பணிந்து செல்வார். மற்ற நால்வரும் இது போன்ற இறைவார்த்தைகளைக் கூறி மலர் தூவிச் செல்வர்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

விடுதலைப் பயணம் 1:22, 2:1-15

**8. இறைவார்த்தை விளக்கம்**

- எகிப்து அரசர் பார்வோன் இஸ்ரயேலருக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகளை நைல் ஆற்றில் எறிந்து கொல்லுமாறு கட்டளையிட்டான்.
- லேவி குலப்பெண் ஒருத்தி, தான் பெற்றெடுத்த ஓர் ஆண் மகனை மூன்று மாதங்கள் மறைத்து வளர்த்தாள்.
- ஒளித்து வளர்க்கப்பட்ட குழந்தையை கோரைப் புல்லால் செய்த பேழையில் வைத்து நைல் நதியில் மிதக்க விட்டாள்.
- பார்வோனின் மகள் அதன் தாயிடம் குழந்தையை வளர்க்கும்படி கூறினாள்.
- நீரிலிருந்து எடுக்கப்பட்டதால் ‘மோசே’ என்று அக்குழந்தைக்கு பெயரிட்டனர். எந்தப் பார்வோன் மன்னன் குழந்தைகளை ஆற்றில் எறியச் சொன்னானோ, அதே பார்வோன் மன்னனின் அரண்மனையில் மோசே வளரும்படி கடவுள் அருள்புரிந்தார்.
- மோசேயைக் கடவுள் அழைத்து அவர் வழியாகவே இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து விடுவித்தார்.

**9. உய்த்துணரச் செய்தல்**

- எல்லாரும் என்னைக் கைவிட்டாலும் கடவுள் என்னை ஒருபோதும் கைவிடமாட்டார்.
- என்னில் குறைபாடுகள் இருந்தாலும் கடவுள் என்னையும் அழைக்கின்றார்.
- நான் நல்ல தலைவனாக வாழ்வேன்.

## பாகம் - 2 கலை வழிப் பயிற்சி


### 1. குழந்தை மோசே

பார்வோனின் மகள் நைல் நதியில்

கிடக்கும் குழந்தையை

எடுக்கச் செல்கின்றாள்.

வழிகாட்டுங்கள்.



வழிகாட்டும் தோழி

### 2. புதிர்

1. விப 1:22; 2:1-15 இப்பகுதியை வாசிக்கவும்
2. கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் பெயர்கள் சிதறி உள்ளன. சரியாக எழுத்துகளைக் கண்டுபிடித்து இடம், பெயர்களைத் தொகுத்து கீழே எழுதுக.

புரிகின்ற புதிர்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| செ | நை | ரி | ச | த | லி | X |
| க | ர் | ழி | கு | ண் | எ | தை |
| பி | ழ | கோ | ய | ந் | ல் | X |
| ஆ | தோ | ள் | ரே | வி | ம | X |

விடை:

1. ஆண் 2. நைல் 3. குழந்தை 4. எபிரேயர் 5. செவிலி
6. தோழி 7. மகள் 8. சகோதரி



### 3. விடுகதை

1. தண்ணீரில் விடப்பட்டேன் மீனும் அல்ல; பிரிந்து செல்லும் காகிதமும் அல்ல நான் யார்?

**மோசே 2:3**

2. பெண் குழந்தைகளைக் கொல்பவள் கருத்தம்மா; ஆண் குழந்தைகளைக் கொல்லும் கருத்தப்பன் யார்?

**பார்வோன் 1:22**

3. காற்றடித்தால் சாய்வேன்; காற்று ஊதினால் பாடுவேன்; பலமாக நடனமாடுவேன் நான் யார்?

**நாணல் 2:3**

4. பெற்ற குழந்தைக்குத் தாயானவள்; ஆனால் காலச் சூழலில் மாற்றந்தாய் ஆனவள் அவள் யார்?

**மோசேயின் அன்னை 2:9**

5. நைசாகப் பேசுபவன் அல்ல; நடிகையின் பெயருமல்ல நாயகனை ஏந்திநின்றேன் நானிலம் சிறக்க வாழவிட்டேன் நான் யார்?

**நைல்நதி 2:5**

6. குரலில் இனிமை; அசைப்போடுவதில் மென்மை, சாதுவானவன் ஆனால் தின்றுக் கொண்டிருப்பான் அவன் யார்?

**ஆடு 2:16**

7. உதவிடும் மனமுள்ளவன்; விரோதிகளை ஒடுக்குபவன்; பெண்களைக் காத்தவன்; பெருந்தன்மைக் கொண்டவன் இவன் யார்?

**மோசே 2:17**

8. பெயர் கொடுத்தவள். அவள் பெற்றவளுமல்ல. வளர்த்தவளுமல்ல. அவள் யார்? **பார்வோனின் மகள்**

9. வேற்று நாட்டு அந்நியன்; வேற்று நாட்டுடன் பெண் கொண்டவன்; வேற்று நாட்டு வாரிசு வந்தது அவன் பெயரென்ன?

**கேர்சோம் 2:22**

10. உலகிலே சிறந்த நதி; உலகிலே உயர்ந்த நதி; விடுதலை நாயகனை சுமந்த நதி; இந்த ஆஸ்கார் நாயகன் யார்? அவரைச் சுமந்த நதி எது?

**மோசே, நைல்நதி 2:5**

ஆறாம் நாள்

# 6. தாவீது

## பாடம் - 1 பாடப் போதனா முறை

### இறைவார்த்தை

1 சாமுவேல் 17:1-58

*(இந்த இறைவார்த்தைப் பகுதியை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

### இறைச்செய்தி

- நமக்கு ஆற்றல் அளிப்பவர் கடவுள்.
- மனிதர் முன் திறமையற்றவர்கள், கடவுள் செயலால் ஆற்றல் மிக்கவர் ஆவர்.
- தாவீது கோலியாத்தை வென்றதன் வழியாகக் கடவுள் இஸ்ரயேல் குலத்துடன் இருப்பதை உலகம் அறியச் செய்தார்.

### மனநிலை

- என்னிலும் கடவுள் செயலாற்றுகிறார்.
- அவரது வல்லமையால் நான் வெற்றி பெறுவேன்.

### 1. தொடக்கச் செபம்

**பாடல் :** *தாவீதைப் போல நடனமாடி....*

### 2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்

இலங்கையிலிருந்து ஒரு கப்பல் இந்தியா நோக்கி வந்து கொண்டிருந்தது. கடலில் பெரும் புயல் காற்று வீசியது. கப்பலில் இருந்த பயணிகள் அனைவரும் மிகவும் பயந்தனர். சிலர் செபித்தனர். சிலர் உயிர் பிழைக்க வழிதேடினர். கப்பலில் இருந்த பொருள்களைச் சிலர் கடலில் எறிந்தனர். எல்லாரும் பரிதவித்து அலறினர். கப்பலின் மேல் தளத்தில் ஒரு சிறுவன் மட்டும் மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருந்தான். ஒரு பெரியவர் அச்சிறுவனிடம் “நாங்கள் அனைவரும் புயலுக்குப் பயந்து உயிர் பிழைக்க வழிதேடிக் கொண்டிருக்கிறோம். நீ எப்படி மகிழ்ச்சியாய் பயமின்றி விளையாடு கிறாய்?” என்று கேட்டார். அதற்கு அந்தச் சிறுவன் “நான் ஏன் பயப்பட வேண்டும்? கப்பலை ஓட்டுபவரே என் தந்தைதான். ஆகவே எனக்கு எந்தத் தீங்கும் வராது” என்றான்.

### 3. அடையாளத்தை அலசுதல்

- ★ புயல் வீசும் போது சிறுவன் என்ன செய்து கொண்டிருந்தான்?
- ★ பெரியவரின் கேள்விக்குச் சிறுவன் அளித்தப் பதில் என்ன?

### 4. வாழ்க்கை மதிப்பீடு

- துன்பம் பெருகி வரும்போது பெரியோரின் ஆதரவு பயத்தைப் போக்குகிறது, துணிச்சலைத் தருகிறது.



### 5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்

இறைவன் தன்னோடு இருப்பதை உணர்ந்த தாவீது எவ்விதப் பயமும் இன்றி கோலியாத்தை வீழ்த்தியதை இன்று படிப்போம்.

### 6. இறைவார்த்தைக்கு அஞ்சலி

வகுப்புத் தலைவர் திருவிவிலியத்தை மேசைமீது விரித்து வைக்க முன் குறிக்கப்பட்ட மாணவர்கள் சிலர் மேசையைச் சுற்றி நின்று கொண்டு “ஆயன் மந்தையைக் காப்பது போல ஆண்டவர் வார்த்தை நம்மைக் காக்கின்றது” எனப்பாடுவர். பிறகு எல்லாரும் “ஆண்டவரே உமது மந்தையின் ஆடுகளான நாங்கள் உமது குரலுக்குச் செவி சாய்க்கிறோம்” என்று சொல்வர்.

### 7. இறைவார்த்தை முழக்கம்

1 சாமுவேல் 17:1-58

### 8. இறைவார்த்தை விளக்கம்

- ❖ கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேல் மக்கள் தங்களுக்கு ஓர் அரசர் வேண்டும் என்றனர்.
- ❖ கடவுள் இறைவாக்கினர் சாமுவேலைக் கொண்டு சவுல் என்பவரை அரசர் ஆக்கினார்.
- ❖ பெலிஸ்திய இன மக்கள் இஸ்ரயேலருக்கு அடிக்கடி தொல்லை கொடுத்து வந்தனர். எனவே இஸ்ரயேலர் பெலிஸ்தியருக்குப் பயந்து வாழ்ந்தனர்.
- ❖ பெலிஸ்தியனான காத் நாட்டு கோலியாத்து ஆறரை முழம் உயரம் உடைய மனிதன். பயங்கர ஆயுதங்களுடன் இஸ்ரயேலருக்குச் சவால் விடுத்தான்.
- ❖ கோலியாத்தை எதிர்க்க இஸ்ரயேலில் எவரும் முன்வரவில்லை.
- ❖ யூதா நாட்டுப் பெத்லகேமைச் சார்ந்த ஈசாய்க்கு எட்டுப் புதல்வர்கள். அவர்களில் கடைசி மகனான தாவீது ஆடு மேய்த்து வந்தான்.
- ❖ தாவீது சாமுவேலால் அருள்பொழிவு செய்யப்பட்டான்.
- ❖ கடவுள் தம்முடன் இருந்ததால் பெரிய ஆயுதங்கள் எதுவுமின்றித் தனது கவணாலும், கூழாங்கல்லாலும், தாவீது கோலியாத்தை வென்றார்.
- ❖ தாவீது இஸ்ரயேலரின் மிகச் சிறந்தப் பேரரசராக விளங்கினார்.

### 9. உய்த்துணரச் செய்தல்

எனது தேவைகளை இறைவனிடம் கூறி நம்பிக்கையுடன் செபிப்பேன்.

## பாகம் - ௨ கலை வழிப் பயிற்சி

**1. கதை**

**எச்சிக்கையால் கூட . . .**

சுதந்தரம் என்ற பணக்காரன் ஒருவன் இறந்தான். எப்படியோ மோட்சத்தில் இடம் கிடைத்தது. மோட்ச வாயலில் பேதுரு அவனை அழைத்துக்கொண்டு அவனுக்குரிய இடத்தைக் காண்பிக்கச் சென்றார்.

முதலில் பல மாளிகைகள் இருக்கும் பகுதிக்கு அழைத்துச் செல்லும் போது சுந்தரம் “இந்த மாளிகை தான் என் வீடா?” என்று கேட்டான். அதற்குப் பேதுரு மகனே! “இந்த மாளிகை உன் வீட்டுத் தோட்டக்காரனின் மாளிகை” என்றார். உடனே சுந்தரம் அடடே! தோட்டக்காரனுக்கே மாளிகை இவ்வாறு பெரிது என்றால் நம் மாளிகை மிகப் பெரியதாயிருக்கும் என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

பின்பு பேதுரு அடுக்கு மாடிக்கட்டிடம் வழியே அவனை அழைத்துச் சென்றார். அப்போது சுந்தரம் “இந்த அடுக்குமாடிக் கட்டிடம் எனக்குத் தானே?” என்றான். பேதுரு அவனிடம் “இல்லை மகனே இதுதான் உன் வீட்டுச் சமையல்காரன் வீடு உள்ளது” எனக் கூறினார். அதற்கு சுந்தரம் “ஓ அப்படியா? சமையல்காரன் வீடே இப்படி இருக்கும் பொழுது நம் வீடு பல அடுக்கு வீடாகத்தான் இருக்கும்” என்று சொல்லிக் கொண்டான்.

அதன் பிறகு பேதுரு ஓட்டு வீடு வழியாக அழைத்துச் சென்றார். அப்போது சுந்தரம் “இங்குதான் என் வீடு உள்ளதா?” என தயக்கத்துடன் கேட்டான். அதற்கு பேதுரு “இல்லை மகனே இதுதான் உன் வீட்டுப் பாதுகாப்பு ஊழியன் வீடு உள்ளது” என்று கூறினார். “ஆஹா என் வீடு மிகப் பெரியதாய் இருக்கும்” என்று சொல்லிக் கொண்டான்.

பேதுரு அந்த பணக்காரனை ஓர் மணல் குன்று உள்ள இடத்திற்கு அழைத்துச் சென்று மிகச் சிறியதொரு இடத்தைக் காட்டி “மகனே! இங்கு தான் உன் இடம் உள்ளது” என்று கூறினார்.

சுந்தரம் வியப்பில் ஆழ்ந்து “என் வீட்டில் வேலை செய்பவருக்கு மாடமாளிகை இருக்கும் பொழுது எனக்கு மட்டும் சிறு நிலமா?” என்று பேதுருவிடம் கேட்டான். அதற்கு பேதுரு அவனிடம் “மகனே சொல்வதைக் கேள். நீ உலகில் வாழ்ந்த போது ஏழைகளுக்கு எவ்வளவு பணம் கொடுத்தாயோ அதை வைத்துத்தான் இங்கு உனக்கு நிலம் வாங்க முடிந்தது.

உன் வீட்டு வேலைக்காரர்கள் ஏழையாயினும் தம்மிடம் உள்ளதைப் பிறருக்கு அதிகம் கொடுத்தனர். இங்கு மாடமாளிகையில் உள்ளனர். நீ சிறிதளவே கொடுத்தாய். அதனால் உனக்கு இந்தச் சிறிய நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது” என்று கூறினார். அந்த பணக்காரன் சுந்தரம் தன் தவறை நினைத்து வருந்தினான்.

**கருத்து:** நாம் உலகில் வாழும்போது பிறருக்கு உதவி செய்து வாழ்வோம்.

லூக் 6:33 “கொடுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும்”




**2. தாவீது கோலியாத் (இந்த உரையாடலை நடிக்கவும்)**

உருவத்தைப் பார்த்து எடை போடாதே

டேய்! பொடியா!
உனக்கு என்ன திமிர்?
என்கிட்ட மோதுகிறாயா?

நீ வாளோடு வருகிறாய். நானோ இஸ்ரயேலர் கடவுளின் துணையோடு வருகிறேன்.



நான் தான்
செய்ப்பேன்.
ஈட்டியால்
உன்னைக் கொள்வேன்

இல்லை, இல்லை. கடவுளின் துணையாலே நான் தான் உன்னை வெற்றி கொள்வேன்

**3. தன் வரலாறு (சுயசரிதை)**

ஹலோ! என்ன பாக்கிறீங்க என் பெயர் கல். நான் பெரிய பாறையிலிருந்து சிறு சிறு துண்டாகப் பிரிந்தவன். என்னைச் சாதாரண கல்தானே என்று நினைக்காதீங்க. வரலாற்றில் எனக்கு சிறப்பிடம் உண்டு.

முன்னொரு காலத்தில் இஸ்ரயேல் மக்கள் ஏலா பள்ளத்தாக்கில் வாழ்ந்து வந்தனர். இஸ்ரயேல் மக்களுக்கும் பெலிஸ்திய படைகளுக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்படும். பெலிஸ்திய படையில் கோலியாத்து என்ற பெரிய வீரன் இருந்தான். ஆறரை முழம் உயரமும் ஐம்பத்தி ஏழு கிலோ கொண்ட இரும்புக் கவசமும் அணிந்திருந்தான். அவன் இஸ்ரயேல் மக்களை அச்சுறுத்தி அவர்களின் கடவுளையும் பழித்துரைத்தான்.

அப்போது இஸ்ரயேலின் முதன் மன்னன் சவுல் கோலியாத்திற்கு அஞ்சினான். சவுல் மன்னனோ, கோலியாத்தின் தலையை வெட்டிக் கொண்டு வருபவருக்கு தம் மகளை மணம் செய்து வைப்பதாகக் கூறினான்.

பெத்தலகேம் ஊரில் தாவீது என்ற இளைஞன் இருந்தான். தாவீது ஈசாயின் கடை மகன்.

இவன் தன் சகோதரர்கட்கு உணவு கொடுக்கப் போர்க்களத்திற்கு சென்றான். போர்க்களத்தில் கோலியாத்தைக் கண்டான். கோலியாத்தை கொல்லத் திட்டமிட்டான்.

அரசன் சவுல் தாவீதிற்கு கவசம் அணிவிக்க அவன் வேண்டாம் என்று கழற்றிவிட்டு கையில் ஒரு கவணையும் கல் சகோதரர்களில் ஐவரை எடுத்துக் கொண்டான்.

நாங்கள் எங்கள் தலைவன் தாவீதுக்கு விசுவாசமாய் செயல்படுவோம் என்று வாக்களித்தோம்.

போர்க்களத்தில் மாமிச மலையாய் கோலியாத்து நின்று ஏளனப் பேச்சு பேசிக் கொண்டு இருந்தான்.

"பொடிச் சுண்டெலி சிங்கத்தை வெல்லுமா" என்றான். தாவீதின் முகம் சிவந்தது. எங்களில் ஒருவரை மட்டும் எடுத்துக் கவணில் வைத்துச் சுழற்றினான்.

கோலியாத்தின் நெற்றிப் பொட்டில் நாங்கள் போய் டமால், டுமில் என்று நச்சுண்ணு அடித்தோம் பாருங்கோ.

அங்கே, குதர்க்கம் பேசிய மாமிச மலை போன்றவன் கீழே விழுந்தான். நாங்களும் கீழே விழுந்து விழுந்து சிரித்தோம். எங்கள் தலைவர் தாவீது ஜெயித்து விட்டார் என்று மகிழ்ச்சி அடைந்தோம். தாவீது ஓடிவந்து தன் வாளால் கோலியாத்தின் தலையை வெட்டினார்.

சிறு கற்களாகிய நாங்கள் தாவீதின் வெற்றிக்கு மூலைக் கல்லாய் அமைந்தோம் என்று பெருமிதம் கொண்டோம். எங்களால் தாவீது அரசரானதை நினைத்து இரட்டிப்பான மகிழ்ச்சி கொள்கின்றோம்.

"சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்பதை நிரூபித்துக் காட்டி விட்டோம். லூக் 19:17 "மிகச் சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். நான் உன்னை பெரியவற்றுக்கு அதிகாரியாக்குவேன்."



**ஏழாம் நாள்**

# 7. சாலமோன்

**பாகம் - 1 பாடப் போதனா முறை**

## இறைவார்த்தை

1 அரசர்கள் 3:1-28

*(இந்த இறைவார்த்தைப் பகுதியை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

## இறைச்செய்தி

- மற்றவர்களுக்கு உதவி செய்ய வரம் கேட்கும்போது, கடவுள் மகிழ்ச்சியோடு வாரி வழங்குகிறார்.
- சாலமோன் கடவுளிடம் ஞானத்தைக் கேட்டார். கடவுள் அவருக்கு அதை வழங்கினார்.
- ஞானத்தின் ஊற்று கடவுள். நாம் ஞானம் நிறைந்தவர்களாக வாழ அழைக்கப்படுகிறோம்.

## மனநிலை

- நான் கடவுளிடம் ஞானத்தைக் கேட்பேன்.
- கடவுள் எனக்கு நன்மையானவற்றை நிச்சயம் தருவார்.

### 1. தொடக்கச் செபம்

***பாடல் :*** *தூய ஆவியே துணையாக வருவீர்.*

### 2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்

வினோதினிக்கு மூன்று வயதாகிறது. அவள் நெல்லையில் வசிக்கிறாள். அவள் 1330 திருக்குறள்களையும் மனப்பாடமாக ஒப்பித்தாள். இதனைக் கேட்ட பலரும் அவளது நினைவாற்றலை வியந்து பாராட்டினர்.

### 3. அடையாளத்தை அலசுதல்

- வினோதினியின் சாதனை என்ன?
- வினோதினி எத்தனைக் குறளை ஒப்பித்தாள்?
- நீ செய்த சாதனை என்ன?

### 4. வாழ்க்கை மதிப்பீடு

சிலரிடம் வியத்தகு திறமைகள் உள்ளன. என்னிலும் திறமைகளை வளர்த்துக் கொள்வேன்.

### 5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்

கனவில் தோன்றிய கடவுளிடம் ஞானத்தைக் கேட்ட சாலமோனைப் பற்றிய இறைவார்த்தையைக் கேட்போம்.